(6 Pages) **Reg. No. : ......................................**

**Code No. : 5147** **Sub. Code : PTLM 32**

M.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2021.

Third Semester

தமிழ் - Core

இலக்கணம் III — தொல்காப்பியம்-பொருள் I

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத்
தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தொல்காப்பியர் குறிப்பிடும் அகத்திணைகள் எத்தனை?

(அ) ஐந்து (ஆ) ஆறு

(இ) ஏழு (ஈ) பன்னிரண்டு

2. பெருமையும் உரனும் —————— மேன.

(அ) ஆடூஉ (ஆ) மகடூஉ

(இ) தோழி (ஈ) செவிலி

3. பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தது எது?

(அ) களவு (ஆ) கற்பு

(இ) உடன்போக்கு (ஈ) கரணம்

4. தலைவி, தோழி, நற்றாய், செவிலி எனும் நால்வர்க்கும் உரியது ————————

(அ) பால்கெழுகிளவி (ஆ) தெரித்து மொழி

(இ) இரட்டைக்கிளவி (ஈ) நகைமொழி

5. வஞ்சிதானே ———————— புறனே.

(அ) குறிஞ்சி (ஆ) முல்லை

(இ) மருதம் (ஈ) பாலை

6. கொடிநிலை, கந்தழி, வள்ளி என்பன எதனோடு பொருந்தி வரும்?

(அ) கடவுள் வாழ்த்தோடு

(ஆ) வாயுறைவாழ்த்து

(இ) புறநிலை வாழ்த்து

(ஈ) செவியறிவுறூஉ

7. நம்பி அகப்பொருளின் ஆசிரியர் யார்?

(அ) தொல்காப்பியர் (ஆ) பவணந்தியார்

(இ) நாற்கவிராசநம்பி (ஈ) அமிர்தசாகரர்

8. தலைவன் தலைவி இருவரில் ஒருவரிடத்துத தோன்றும் அன்பு எது?

(அ) புணர்தல் (ஆ) கைக்கிளை

(இ) பிரிதல் (ஈ) ஊடல்

9. வீரர்கள் கள்ளுண்டு களித்து ஆடுவது

(அ) கொற்றவைநிலை (ஆ) வெறியாட்டு

(இ) உண்டாட்டு (ஈ) பாதீடு

10. பாண்டியரின் அடையாளப் பூ எது?

(அ) அத்திப்பூ (ஆ) வேப்பம்பூ

(இ) பனம்பூ (ஈ) அரளிப்பூ

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.
வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

11. (அ) கைக்கிளை, பெருந்திணைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'பாங்கர் நிமித்தம் பன்னிரண்டெனப' - விவரிக்க.

12. (அ) கற்பின்கண் வாயில்களுக்கு கூற்று நிகழுமிடங்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தோழி அறத்தொடு நிற்கும் இயல்புகளை பொருளியல் வழி எடுத்தியம்புக.

13. (அ) தும்பைத் திணையின் துறைகளைச் சான்றுடன் கூறுக.

(அல்லது)

(ஆ) பாடாண்திணையின் இலக்கணம் கூறி அதன் வகைகளைப் புலப்படுத்துக.

14. (அ) தொல்காப்பியம் - நம்பியகப்பொருள் கூறும் அன்பின் ஐந்திணைகளுக்குரிய கருப்பொருள்களை ஒப்பிடுக.

(அல்லது)

(ஆ) ‘மரபைப் போற்றுவதில் நாற்கவிராசநம்பி தொல்காப்பியரையே பின்பற்றினார்’ – எனும் கூற்றை நிறுவுக.

15. (அ) தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை உணர்த்தும் நடுகல் வழிபாடு குறித்த செய்திகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) புறப்பொருளை விளக்குவதில் ஐயனாரிதனார் தொல்காப்பியரிடமிருந்து எங்ஙனம் வேறுபடுகிறார்? விளக்குக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களில் விடை தருக.
வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

16. (அ) பிரிவின்கண் தலைமகனுக்கு கூற்று நிகழுமிடங்களை அகத்திணையியல் வழி விவரிக்க.

(அல்லது)

(ஆ) களவில் தோழிக்கு நிகழும் கூற்றுக்களை எடுத்தியம்புக.

17. (அ) கற்பில் தலைவி கூற்று நிகழுமிடங்களை வெளிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பாகுபடுத்திக் காட்டலாகப் பொருள் குறித்துப் பொருளியல் வழி விளக்குக.

18. (அ) வெட்சித் திணையின் துறைகளை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) வாகைத் திணை குறித்த தொல்காப்பியரின் கருத்துக்களை எடுத்துரைக்க.

19. (அ) அகத்திணைக் கோட்பாடுகளை தொல்காப்பியம், நம்பி அகப்பொருள் நூல்களில் உணர்த்தப்படும் விதத்தை ஆராய்க.

(அல்லது)

(ஆ) சங்ககால மக்களின் அக உணர்வுகள் நம்பியகப் பொருளில் கூறப்பட்டுள்ளதை தொல்காப்பியத்தோடு ஒப்பிடுக.

20. (அ) தமிழ் மக்களின் வீரம் புறப்பொருள் வெண்பா மாலையில் வெளிப்படும் விதத்தை தொல்காப்பியத் தோடு இணைத்துக் காட்டுக.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியத்தில் புறப்பொருள் தொல்காப்பியத்தைப் பின்பற்றி உணர்த்தப்பட்டுள்ளது - எனும் கூற்றை ஆராய்க.